
பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆடி 15 | வியாழக்கிழமை | 31.07.2025 | அதிர்வு 364

### விசா நிபந்தனைகளை மீறிய

## இந்தியர்கள் 155 பேர் அதிரடியாகக் கைது!



இலங்கையில் விசா நிபந்தனைகளை மீறி யதற்காகக் குடிவரவு மற்றும் குடிய

08

# செம்மணியில் இதுவரை 115 மனித எலும்புக்கூடுகள்

## நேற்று 4 என்புத் தொகுதிகள் அடையாளம்



(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின் போது புதிதாக நான்கு மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்மூலம் செம்மணிப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 115 ஆக அதிகரித்துள்ளது.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 25ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது நான்கு மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. மூன்று மனித என்புத் தொகுதிகள்

06

# சிறிய குழந்தையின் எலும்புக்கூட்டை அரவணைத்தபடி பெரிய எலும்புக்கூடு

## செம்மணிப் புதைகுழியில் நேற்று அகழ்ந்தெடுப்பு



(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

**யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து பெரிய என்புத் தொகுதி ஒன்றும் சிறிய குழந்தையின் என்புத் தொகுதி ஒன்றும் அரவணைத்தபடி அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.**

08




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுமார் ஒரு மாத கால வெளிநாட்டுப் பயணத்துக்கு பின்னர் நாடு திரும்பி விட்டார். தமது கட்சி மற்றும் சட்டப் பணிகளை ஜரூராகத் தொடங்கிவிட்டார்.

அவர் நாடு திரும்பியமையை அடுத்து கட்சியின் அரசியல் குழுவும், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான விடயங்களை ஆராய நியமிக்கப்பட்ட எழுவர் குழுவும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை ஒன்றாக யாழ்ப்பாணத்தில் மார்ட்டின் வீதியில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் கூட இருப்பதாகத் தெரிய வருகின்றது.

பெரும்பாலும் கட்சியின் அரசியல் குழுவில் இருக்கும் உறுப்பினர்களே அந்த எழுவர் குழுவிலும் இருக்கிறார்கள். மேலதிகமாக கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசனும் சட்டத்தரணி கேசவன் சயந்தனும் எழுவர் குழுவில் உறுப்பினராக இருப்பதால் அவர்களும் நாளை மறுதினம்

06

# செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று நடைபெற்ற அகழ்வுப் பணி

(படங்கள்:- பிரபாகரன் டிலக்சன்)











# லலித் - குகன் வழக்கில் சாட்சியமளிக்கத் தயார்

## உயர்நீதிமன்றத்துக்குக் கோட்டா அறிவிப்பு



2011 ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்ட இரண்டு மனித உரிமை ஆர்வலர்களான லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் தொடர்பாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு தொடர்பான வழக்கில் சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று உயர்நீதிமன்றத்துக்கு அறியப்படுத்தியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பான மேன்முறையீட்டு மனு நேற்று உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

எவ்வாறாயினும், தற்போதுள்ள பாதுகாப்புகாரணங்களுக்காகத்தமதுசேவைப் பெறுநர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்குப் பதிலாக கொழும்பு நீதிமன்றம் ஒன்றில் சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி நேற்று நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

இதன்போது. மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம், இந்தக் கோரிக்கையை நேற்றில் இருந்து ஒரு வாரத்துக்குள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துப் பொருத்தமான உத்தரவுகளைப் பெற நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வாவுக்கு அறிவித்தது.

மனுதாரர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி நுவான் போபகேவும் அந்தக் கோரிக்கைக்கு தமது இணக்கத்தைத் தெரிவித்தார்.

அதன்படி, மேன்முறையீட்டு மனுவின் விசாரணையை முடிவுறுத்துவதற்கு நீதியரசர்கள் ஆயம் முடிவு செய்தது.

2011டிசம்பர்9ஆம்திகதிலலித்வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக அவர்களது உறவினர்களால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவொன்று தாக்கல் செய்யயப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பாக சாட்சியமளிக்க நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் பாதுகாப்புச் செயலாளராகப் பதவி வகித்திருந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 2019 ஆம் ஆண்டு அறிவித்தல் அனுப்பப்பட்டது.

எனினும், பாதுகாப்புக் காரணங்களுக்காகச் சாட்சியமளிக்க யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்குச் செல்ல முடியாது எனக் கூறி, குறித்த அறிவித்தல் அனுப்பும் முடிவுக்கு எதிராக கோட்டாபய ராஜபக்ஷ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கக் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட அறிவித்தலை இரத்துச் செய்தது.

இந்தநிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் குறித்த தீர்ப்பை இரத்துச் செய்யக் கோரி, காணாமல்போனவர்களின் உறவினர்கள், உயர்நீதிமன்றத்தில் இந்த மேன்முறையீட்டைத் தாக்கல் செய்தனர்.

# முன்னாள் கடற்படைத் தளபதிக்கு ஓகஸ்ட் 13 வரை மறியல் நீடிப்பு!



முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் (ஓய்வுநிலை) நிஷாந்த உலுகேதென்ன மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொத்துஹெர பகுதியில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பாக அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டார்.

இந்தநிலையில், நேற்று பொல்கஹவெல நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# தெதுருஓய பாலத்துக்கு அருகில் விபத்து

(உடப்பு க.மகாதேவன்)

பாதெனிய – அநுராதபுரம் வீதி ரிதி வெதியல்ல தெதுருஓய பாலத்துக்கு அருகில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் மோட்டார் காரை செலுத்திச் சென்றவர் படுகாய மடைந்த நிலையில் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டார் என அநுராத புரம் பொலிஸார் தெரிவித்தனர். காரை செலுத்திச் சென்றவர் நித்திரைக் கலக்கம் காரணமாக அருகில் செவ்விளநீர் குலைகளுடன் நின்ற சிறிய ரக லொறி யுடன் மோதி இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.









# செல்லையா இராஜதுரைக்கு வயது 97

இலங்கையின் முதலாவது இந்து மத, கலாசார அமைச்சராக இருந்த செல்லையா இராஜதுரை தனது 97ஆவது பிறந்த தினத்தை நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமையன்று தனது சென்னை இல்லத்தில் மிக எளிமையான முறையில் கொண்டாடினார்.

கொழும்பு, புதுச்செட்டித் தெரு சாயி மத்திய நிலையத்தின் ஸ்தாபகர் அமரர் எஸ்.டி. சிவநாயகத்துடன் உறுதுணையாக இருந்து, சாயி நிலையத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு வழங்கிய முன்னாள் அமைச்சர் இராஜதுரையை, கொழும்பு சாயி மத்திய நிலையத்தின் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் பாராட்டி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.



# உள்ளகப் பொறிமுறையால் நீதி கிடைக்க மாட்டாது தொடர்ச்சியான கோரிக்கையை புறம்தள்ளும் ஐ.நா.

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் விசனம்









(கி.வசந்தன்)

உள்ளகப் பொறிமுறையால் நீதி கிடைக்காது என்ற தொடர்ச்சியான வெளிப் படுத்தலை ஐ.நா. புறம்தள்ளுவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஆர் பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் –

உள்ளகப் பொறிமுறையை நாம் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றோம். அப்படி இருந்த போதும் அதனையே மேற் கொள்ளுமாறு ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஓர் இனப்படுகொலை இடம்பெற்ற நாட்டில் அதனை மேற்கொண்ட குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்து வதற்கு இந்த உள்ளகப் பொறிமுறை எப்படி சாத்தியமான முறையில் வழி வகுக்கும் என எமக்குத் தெரியவில்லை.

இந்தநாட்டில் குற்றம் இழைத்த வர்களுக்கு உயர் பதவிகள் வழங்கிக் கௌரவிக்கும் நிலையே தொடர்ச்சியாக இருக்கின்றது. அத்துடன் தாயக பகுதி களில் தற்போது வெளிப்படும் மனித புதைகுழிகள் இங்கு இனப்படுகொலை நடந்துள்ளது என்பதை உணர்த்தி நிற் கின்றன.

இனப்படுகொலை நடந்துள்ளது என்பதற்கு சாட்சியமாகவே இந்தப் புதை குழிகள் வெளிப்படுகின்றன. இவற்றைச் செய்தவர்கள் யார் என்ற உண்மையை சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமே அறியமுடியும்.

தொடர்ச்சியாக நீதி கோரிப் போராடி வரும் நாம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் சர்வதேச விசாரணையினை வலியுறுத்தி வடகிழக்கு தழுவிய ரீதியில் மாபெரும் போராட்டம் ஒன்றையும் முன்னெடுக்கவுள்ளோம். – எனத் தெரிவித்தனர்.












# கைவிடப்பட்ட அரச கட்டடங்களை பல்கலை விடுதிகளாக்க தீர்மானம்

கைவிடப்பட்டுள்ள அரச கட்டடங்களை பல்கலைக்கழகங்களுக்கான விடுதிகளாக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக தனியார் துறையினருடன் இணைந்து விடுதிக்கான கட்டடங்களை நிர்மாணிக்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் கல்வி பிரதியமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் கைவிடப்பட்டுள்ள கட்டடங்களை அடையாளங்காணும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பல்கலைக்கழுங்களிலிருந்து தூரப்பகுதிகளில் காணப்படும் விடுதிகளுக்கான போக்குவரத்து திட்டங்களை துறைசார் அமைச்சுடன் இணைந்து முன்னெடுத்துவருவதாகவும் கல்விபிரதியமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெறும் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் நாளை மறுதினம் நடைபெறும் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே கட்சி ஒழுங்கு விதிகளுக்கு மாறாக நடந்து கொண்டமைக்காக கட்சியின் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட விளக்கம் கோரும் கடிதங்கள் தொடர்பான தொடர் நடவடிக்கை குறித்தும் இந்த கூட்டத்தில் ஆராயப்பட்டு முடிவெடுக்கப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தவிரவும் விரைவில் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வையொட்டி கவுன்ஸிலுக்கு அனுப்ப வேண்டிய கடிதம் என்ற பெயரில் ஒன்றை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்துத் தயாரித்து வைத்துள்ளது. அதில் ஒப்பமிடுமாறு தமிழரசுக் கட்சிக்கு அந்த கட்சி தரப்பில் இருந்து நச்சரிப்புகள் கொடுக்கப்பட்டு வரும் நிலையில், அது குறித்தும் நாளை மறுதினம் நடைபெறும் கூட்டத்தில் ஆராயப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சியின் மத்திய குழு, அரசியல் குழு போன்றவை எடுத்த தீர்மானங்களுக்கு மாறாக, திருகோணமலையிலும், பிற இடங்களிலும் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உப தவிசாளர்கள் தெரிவின் போது நடந்து கொண்ட கட்சிப் பிரகிருதிகளிம் அது பற்றிய நேரடியான விசாரிப்புகளும் இந்தக் கூட்டத்தில் இடம்பெறும்பென எதிர்பார்க்கப்படுகின்றது.

* * *

முப்படைகள் மற்றும் பொலிஸ் துறையில் உள்ள உயர் அதிகாரிகளுக்கு முன்னைய ஆட்சியாளர்கள், முறையற்ற விதத்தில் பதவி நீடிப்பு வழங்குவதன் மூலம் அவர்களை – தங்களுக்குப் பிடித்த மாணவர்களை – சேவையில் வைத்துக் கொண்டு, ஏனையோரை நேரத்தோடு ஓய்வு பெற்றுச் செல்ல வைக்கும் அரசியல் சித்து விளையாட்டை படைத்துறை தரப்பினர் மட்டத்திலும் முன்னெடுத்து வருகின்றனர் என்று எதிரணி வரிசையில் இருந்த போது தேசிய மக்கள் சக்தியினர் முன்னிறுத்திப் பிரசாரப் படுத்தி வந்தனர்.

இப்போது அதே தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தற்போதைய இராணுவத் தளபதிக்கு ஒரு வருட பதவி நீடிப்பு வழங்கி இருக்கிறார். எதிர்க் கட்சியில் இருந்தபோது முழக்கமிட்ட பல விடயங்களை இப்போது ஆளும் தரப்புக்கு வந்ததும், வாலைச் சுருட்டி மடக்கிக் கொண்டு மறந்துவிட்டார்கள் புதிய ஆட்சி தரப்பினர் என்று குறை கூறப்படுகின்றது. அதில் ஒன்றுதான் இந்தப் பதவி நீடிப்பு விவகாரமும்.

பல முக்கிய விடயங்களின் கொள்கை தீர்மானங்களில் முந்திய அரசுகள் போட்ட சுவட்டை அப்படியே இப்போதைய அரசும் பின்பற்றுகின்றது. அதில் ஒன்றுதான் இப்படி இராணுவத் தளபதிக்கு பதவி நீடிப்பு வழங்கும் புதிய ஜனாதிபதியின் முடிவும்.

## செம்மணியில் இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 115 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 102 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்.நீதிவான்ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக் குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி ஞா.ரனிதா, சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியற்துறை மாணவர்களும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றனர்.




# மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர்கள் இருவரும் கடமைகளைப் பொறுப்பேற்றனர்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்திற்கு நிர்வாகம் மற்றும் காணி விவகாரங்களுக்குப் பொறுப்பாக மேலதிக அரசாங்க அதிபர்கள் பொது நிர்வாக அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் இருவரும் நேற்றுப் புதன்கிழமை காலை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் முன்னிலையில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

மன்னார் பிரதேசச் செயலாளராகக் கடமையாற்றிய மனோகரன் பிரதீப் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் – நிர்வாகத்திற்கும், மடு பிரதேசச் செயலாளராகக் கடமையாற்றிய கீ.பீட் நிஜாகரன் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் – காணி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இரு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களும் நேற்றுப் புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு வருகை தந்து மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் முன்னிலையில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இரு மேலதிக அரசாங்க அதிபர்களையும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மாலை அணிவித்து வரவேற்றனர். இதன் போது மன்னார் மாவட்டச் செயலகம்,மன்னார்,மடு பிரதேசச் செயலகம் ஆகியவற்றின் பணியாளர்கள், உதவி பிரதேசச் செயலாளர்கள். அதிகாரிகள் கலந்து கொண்டு வரவேற்றனர்.













## இந்தியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கல்வுத்துறை அதிகாரிகள் 155 இந்தியர்களைக் கைது செய்துள்ளனர்

இந்தநிலையில் அவர்கள் தனிப்பட்ட விசா கட்டணமான 200 அமெரிக்க டொலர்களைச் செலுத்துமாறும், 500 அமெரிக்க டொலர்களை அபராதமாகச் செலுத்துமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது பெறப்பட்ட 33.5 மில்லியன் ரூபா வருமானம், இலங்கை குடிவரவுத் திணைக்களத்துக்கு வரலாற்றில் ஒரு நாளில் கிடைத்த அதிக வருமானமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையச் சந்தை மற்றும் பந்தய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த அலுவலகம் ஒன்றைச் சோதனை செய்த போதே, இந்த இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சோதனையின்போது கைது செய்யப்பட்ட 25 - 54 வயதுக்குட்பட்ட மேற்படி இந்தியர்கள், வதிவிட விசாக்களில் இலங்கைக்கு வந்து ஒரு மாதம் முதல் ஒரு வருடம் வரை தங்கி, உள்ளூர் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்துள்ளனர்.

இதேவேளை, வெலிசரையில் உள்ள குடிவரவுத் திணைக்களத்தின் தடுப்பு மையத்தில் இடப் பற்றாக்குறை காரணமாக, தேவையான அபராதங்களைச் செலுத்திய பிறகு உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு மேற்படி இந்திய நாட்டவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## சிறிய குழந்தையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான அகழ்வுகளில் நேற்று வரை 115 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்நிலையில், தடயவியல் அகழ்வாய்வுத் தளம் ஒன்றில் இருந்து பெரிய என்புத் தொகுதி ஒன்றும் சிறிய குழந்தையின் என்புத் தொகுதி ஒன்றும் அரவணைத்தபடி நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவை நேற்றுக் காலை முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தகவல் அறியும் உரிமை

இலங்கையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்பது நாட்டின் ஜனநாயக ஆட்சி முறைமைக்குக் கிடைத்த பெரும் மாண்பாகும்.

தகவல் அறியும் உரிமை ஆணையம் என்பது இந்தச் சட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கத்தால் நிறுவப்பட்ட ஒரு சுதந்திரமான ஆணையமாகும். இந்த ஆணையம் 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலகந்த் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், பொதுமக்களின் தகவல்களை அணுகும் உரிமையை உறுதிப்படுத்தவும், அதற்கான சட்ட நடவடிக்கைகளை கண்காணிக்கவும் நிறுவப்பட்டுள்ளது.

2017 பெப்ரவரியிலேயே தகவலறியும் உரிமைச் சட்டம் இலங்கையில் நடைமுறைக்கு வந்தது.

தகவலறியும் உரிமை சட்டத்தின் வரைவு சட்டம் 2002/ 2003 காலப்பகுதியில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட போதும் நாடாளுமன்றத்தின் அனுமதியை பெறவில்லை. அக்காலப் பகுதியிலேயே இச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்திருக்குமாயின் தகவலறியும் உரிமை சட்டத்தை தெற்காசியாவில் நடைமுறைப்படுத்திய முதல் நாடாக இலங்கை உருவாகியிருக்கும். எவ்வாறாயினும் 2016ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலங்கைத் தகவலறியும் உரிமை சட்டம் உலகின் சிறந்த தகவலறியும் உரிமை சட்டங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. சுருக்கமாக கூறுவதாயின் உலகின் மூன்றாவது சிறந்த தகவலறியும் உரிமை சட்டத்தை இலங்கை கொண்டுள்ளது.

இலங்கையில் இத்தனை தூரம் மதிப்பார்ந்த கட்டமைப்பாக செயல்பட்டு வந்த தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு கடந்த நான்கு மாதங்களுக்கு மேல் தன் பங்களிப்பை சரியாக செய்ய முடியாத விதத்தில் முடங்கிப் போய் இருகின்றது.

இந்த விவகாரத்தில் அந்த ஆணையத்தை உரிய முறையில் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கையை ஜனாதிபதி எடுக்கவில்லை என்று தெரிவித்து, அவருக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் அறியும் உரிமை ஆணையத்தின் தலைவராக இருந்த உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் உபாலி அபேரத்ன கடந்த மார்ச் ஒன்பதாம் திகதி தமது பதவியை ராஜினாமாச் செய்தார். அதிலிருந்து இன்று வரை பதில் தலைவர் கூட அந்த ஆணையத்துக்கு நியமிக்கப்படவில்லை. அதனால்தான் அந்த ஆணையம் உரிய முறையில் செயல்பட முடியாமல் முடங்கிப் போய் இருக்கின்றது.

அதற்கு உரிய பதில் தலைவரைத் தன்னும் உடனடியாக நியமிக்கும்படி ஜனாதிபதிக்கு உத்தரவிடக் கோரி இந்த அடிப்படை உரிமை முதல் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர், சபாநாயகர் மற்றும் அரசமைப்புக் கவுன்ஸிலின் உறுப்பினர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து தகவல் அறியும் உரிமை ஆணையத்தின் தலைவர் பதவி காலியாக உள்ளது, இதனால் தகவல் கோரிக்கைகள் மீதான விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

எல்லாவற்றுக்கும் நீதிமன்றை நாடித்தான் நடைமுறை நீதியை இங்கு பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது. இதுதான் இந்த இலங்கைத் தீவின் சீத்துவம்...!







# த.வெ.க. உறுப்பினர்கள் சேர்க்கை செயலியை வெளியிட்டார் விஜய்

தமிழக வெற்றிக் கழக உறுப்பினர் சேர்க்கை செயலியை, அதன் தலைவர் விஜய் நேற்று வெளியிட்டுள்ளார்.

பனையூரில் நடைபெற்ற த.வெ.க மாவட்டச் செயலாளர்கள் மற்றும் தொகுதி பொறுப்பாளர்கள் கூட்டத்தில் செயலியை வெளியிட்டுள்ளார்.

தமிழகவெற்றிக்கழகத்தின்அனைத்து உறுப்பினர்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து சேர்க்கும் நோக்கில் இந்த செயலி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த செயலி அறிமுக நிகழ்வின் போது, கட்சி நிர்வாகிகள் மற்றும் விஜய்யின் மக்கள் இயக்கப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தச் செயலியின் மூலம், பொது மக்கள் தங்கள் தொலைபேசிகளிலேயே சில எளிய வழிமுறைகளைப் பின்பற்றி உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக வெற்றி கழக தலைவர் விஜய், இந்தச் செயலி மூலம் பெருமளவிலான இளைஞர்களையும், புதிய வாக்காளர்களையும் கட்சியில் இணைக்க முடியும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் விஜய் உரையாற்றுகையில்,

“இதற்கு முன்னால் தமிழக அரசியலில் நடந்த மிகப்பெரிய இரண்டு தேர்தல்களைப் போல 2026 தேர்தலும் அமையப் போகிறது. அந்த இரண்டு மாபெரும் தேர்தல்களில் ஏற்கெனவே தொடர்ந்து ஜெயித்துக் கொண்டிருந்த அதிகார பலம், அசுர பலம் அனைத்தையும் எதிர்த்து நின்று தான் புதிதாக வந்தவர்கள் ஜெயித்தனர். ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு என்ற அனைத்து மக்களையும் சந்தித்தனர்.

அண்ணா சொன்ன அதே விஷயத்தை நானும் இங்கே சொல்ல விரும்புகிறேன். மக்களிடம் செல், மக்களிடமிருந்து கற்றுக் கொள், மக்களுடன் வாழ், மக்களுடன் சேர்ந்து திட்டமிடு. இதைச் சரியாக செய்தாலே போதும். அதனால் தான் இந்தச் செயலியை அறிமுகப்படுத்துவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இதன் பிறகு மதுரை மாநாடு, மக்கள் சந்திப்பு, பயணம் என மக்களோடு மக்களாகத்தான் இருக்கப் போகிறோம். நம்முடன் மக்கள் இருக்கிறார்கள். நல்லதே நினைப்போம். நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்.” என்று தெரிவித்தார்.





# பா.ஜ.க. மாநில நிர்வாகிகள் அறிவிப்பு; துணைத் தலைவராக குஷ்பு நியமனம்

தமிழக பா.ஜ.க. மாநில நிர்வாகிகள் பட்டியலை மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ளார். நடிகை குஷ்பு உள்ளிட்ட 14 பேர் மாநில துணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"பா.ஜ.க. தேசிய தலைவர் நட்டாவின் ஒப்புதலுடன் தமிழக பாரதிய ஜனதா கட்சிக்கு புதிய மாநில நிர்வாகிகள் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

மாநில துணைத் தலைவர்களாக எம். சக்கரவர்த்தி, வி.பி. துரைசாமி, கே.பி. ராமலிங்கம், கரு நாகராஜன், சசிகலா புஷ்பா, கனகசபாபதி, டால்பின் ஸ்ரீதர், ஏ.ஜி.சம்பத், பால் கனகராஜ், ஜெயபிரகாஷ், மா.வெங்கடேசன், கோபால்சாமி, குஷ்பு சுந்தர், என். சுந்தர் ஆகிய 14 பேர் நியமிக்கப்படுகிறார்கள். மாநில அமைப்பு பொதுச் செயலாளராக கேசவ விநாயகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாநில பொதுச் செயலாளர்களாக பாலகணபதி, ராம ஸ்ரீநிவாசன், எம். முருகானந்தம், கார்த்தியாயினி, ஏ.பி. முருகானந்தம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மாநில செயலாளர்களாக கராத்தே தியாகராஜன், அமர்பிரசாத் ரெட்டி உள்ளிட்ட 15 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மாநில பொருளாளராக எஸ்.ஆர். சேகர் நியமிக்கப்பட்டுள்ளார். மாநில பிரிவு அமைப்பாளராக கே.டி.ராகவன் நியமிக்கப்பட்டுள்ளார். மாநில அலுவலக செயலாளராக எம்.சந்திரனும், மாநில தலைமை செய்தி தொடர்பாளராக நாராயணன் திருப்பதியும் நியமிக்கப்பட்டுள்ளனர்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீதி விபத்தை ஏற்படுத்திய பிரபல இந்திய நடிகை கைது






பிரபல இந்திய நடிகை நந்தினி காஷ்யப், குவஹாத்தி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீதி விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பியோடிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 25 ஆம் திகதி குவஹாத்தி பகுதியில் 21 வயதுடைய கல்லூரி மாணவர் ஒருவரின் காருடன், மேற்படி நடிகை பயணித்த கார் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தவிபத்தில்படுகாயமடைந்தமாணவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த விபத்து இடம்பெற்ற பின்னர், நடிகை சம்பவ இடத்திலிருந்து தப்பியோடிய காட்சி அருகிலிருந்த பாதுகாப்பு கேமராவில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதனைத் தொடர்ந்து, விபத்துக்குக் காரணமான நடிகை கைது செய்யப்பட்டுள்ளார் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# இந்தியாவின் இறக்குமதி பொருள்களுக்கு 25 வீத வரி விதித்தார் டொனால்ட் ட்ரம்ப்

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு மேற்கொள்ளப்படும் ஏற்றுமதிகளுக்கு 25வீத வரி அறவிடப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

உக்ரைன் மோதலுக்கு மத்தியில் இந்தியா, ரஷ்யாவிலிருந்து எண்ணெய் மற்றும் இராணுவ கொள்முதல்களில் ஈடுபடுவதை மையப்படுத்தி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

நட்பு நாடுகளாக இருந்தாலும், இந்தியாவின் அதிக வரிகள் உட்பட்ட விடயங்களால், இந்தியாவும் அமெரிக்காவும் மட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக தொடர்புகளைக் கொண்டுள்ளன என்று ட்ரம்ப் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியா தங்களின் நட்பு நாடாக இருந்தாலும், பல ஆண்டுகளாக இந்தியாவுடன், அமெரிக்கா ஒப்பீட்டளவில் சிறிய வியாபாரத்தையே மேற்கொண்டுள்ளது. இந்தியாவின் கட்டணங்கள் மிக அதிகமாக உள்ளன.

அத்துடன், அவை எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு மிகவும் கடுமையான நாணயமற்ற வர்த்தக தடைகளைக் கொண்டுள்ளதாகவும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா வரலாற்று ரீதியாக ரஷ்யாவிலிருந்து பெரும்பாலான இராணுவ உபகரணங்களை கொள்வனவு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சீனாவுடன் சேர்ந்து ரஷ்யாவின் மிகப்பெரிய எரிசக்தி கொள்வனவு செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தநிலையில், ரஷ்யா, உக்ரைனில் கொலை செய்வதை நிறுத்த வேண்டும் என்று அனைவரும் விரும்பும் நேரத்தில் ஓகஸ்ட் முதல் இந்தியா 25 வீத வரியை செலுத்தும் என்று டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# ஈக்குவடோரில் துப்பாக்கிச்சூடு குழந்தை உட்பட 17 பேர் பலி



ஈக்குவடோரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் குழந்தை உட்பட 17 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

தென் அமெரிக்க நாடான ஈக்குவடோரில் போதைப்பொருள் கடத்தல் குழுக்களிடையே, பல ஆண்டுகளாக வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருகிறன.

இந்த நிலையில், கடலோர மாகாணமான குவாயாஸ் அருகே அமைந்துள்ள மதுபானக்கடையில் இரு போதைப் பொருள் கடத்தல் குழுக்களிடையே துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

இரு வாகனங்களில் வந்த குழுக்கள், மதுபானக்கடையில் இருந்தவர்களை நோக்கித் துப்பாக்கியால் சுட்டதில், ஒரு குழந்தை உட்பட 17 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# அங்கோலா தலைநகரில் ஆர்ப்பாட்டம்; ஐவர் பலி

அங்கோலாவின் தலைநகர் லுவாண்டாவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, 1,200 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெட்ரோல் விலை உயர்வுக்கு எதிராக வாடகை வாகன ஓட்டுநர்கள் நடத்திய மூன்று நாள் பணி நிறுத்தமே, நாடளாவியரீதியில்ஆர்ப்பாட்டங்களுக்குவழியை ஏற்படுத்தியது.

இந்தநிலையில் கடந்த திங்களன்று தலைநகரில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்.

இதன்போது வீதிகள் அடைக்கப்பட்டு, வியாபாரத்தளங்கள் சூறையாடப்பட்டன எனவும் வானங்கள் எரியூட்டப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.





# நாவிதன்வெளி - சம்மாந்துறை எல்லைப் பகுதியில் வீரச்சோலை கிராமத்தின் பெயர்ப் பலகை தகர்ப்பு




( வி.ரி. சகாதேவராஜா)

நாவிதன்வெளி – சம்மாந்துறை பிரதேச எல்லைக் கிராமமான வீரச்சோலை கிராமத்தின் பெயர்ப் பலகை இனந் தெரியாதோரால் தகர்க்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை – சொறிக்கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள இந்தப் பெயர்ப்பலகையே கூரிய ஆயுங்கள் கொண்டு தகர்ப்பட்டுள்ளது.

இதனை அடுத்து நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளர் இந்திரன் ரூபசாந்தன் நேற்று அங்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

இதனை தொடர்ந்து அவர் ஊடங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழும் இந்தப் பிரதேசத்தில் இவ்வாறான விஷமத்தனமான செயற்பாடுகள் இனங்களுக்கிடையே முரண்பாடுகளை தோற்றுவிப்பனவாக அமையும் . இவ்வாறான விசமத்தனமான செயற்பாடுகள் மூலம் இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்த முடியாது. – எனத் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அவர் தெரியப்படுத்தினார்.

நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் கோபாலசிங்கம் உதயகுமார், நாவிதன்வெளி பிரதேச சபை செயலாளர் ஆகியோரும் நேரில் சென்று பார்வையிட்டனர்.





# வவுனியா மாநகரசபை மடுவத்தில் சுகாதாரச் சீர்கேடுகள் ஏதுமில்லை

## மாநகர சபை செயலாளர் கடிதம் மூலம் உறுதிப்படுத்தல்




**(வவுனியா நிருபர்)**

வவுனியா மாநகரசபை மடுவத்தில் சுகாதார சீர்கேடுகள் இல்லை. திருத்தப் பணிகள் சில மேற்கொள்ள வேண்டியுள்ளன. ஆனால் அது விலங்குளை வெட்டுவதற்கு தடையாக இல்லை என மாநகர சபை செயலாளரின் கடிதம் மூலமான உறுதிப்படுத்தலை அடுத்து மடுவச் செயற்பாடுகள் நேற்றுப் முதல் மீள ஆரம்பமாகியுள்ளன.

வவுனியா மாநகர சபைக்குச் சொந்தமான விலங்குகள் வெட்டும் மடுவம் சுகாதார சீர்கேட்டுடன் இயங்குவதாக மாநகரசபை உறுப்பினர்கள் சிலர் சென்று பரிசோதனை மேற்கொண்டு தெரிவித்திருந்த நிலையில் அது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன், அந்தக் கட்டடத்திற்கான மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக ஒப்பந்தகாரர்கள் அந்த இடத்தினை மாநகரசபை சீர்செய்து தரும்வரையில் விலங்குகளை அறுக்க முடியாது எனத் தெரிவித்து விலங்குகளை இறைச்சிக்காக அறுக்காது நிறுத்தியதுடன் வவுனியாவில் உள்ள இறைச்சிக்கடைகளும் மூடப்பட்டிருந்தன.

இதனால் மாநகரசபையின் வருடாந்த வருமான இழப்பிற்கும் இது காரணமாக அமைந்திருந்தது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை வவுனியா மாநகர சபை செயலாளர் உள்ளிட்ட குழு மடுவத்தை பார்வையிட்டதன் பின் ஒப்பந்தகாரர்களுடன் கலந்துரையாடியிருந்தது.

இதன்போது ஒப்பந்தகாரர்களால் மடுவம் செயற்படுத்துவதாக இருந்தால் மாநகரசபைக்கு சொந்தமான அந்தக் கட்டடத்தைப் பார்வையிட்ட மாநகரசபை உறுப்பினர்கள் அடங்கிய குழு கூறிய சுகாதார பிரச்சனைகளை சீர்செய்து தரவேண்டும் எனக் கோரிக்கையினை விடுத்திருந்தனர்.

இதன் பிரகாரம் 29.07.2025 திகதியிடப்பட்டு வழங்கப்பட்ட கடிதத்தில் -

இந்த விலங்கறுமனை மின்சார விநியோகம் முன்னறிவித்தல் இன்றி துண்டிக்கப்பட்டமை தொடர்பில் மின்சார சபையிடம் பதிலை சபை எதிர்பார்த்துள்ள அதேநேரம் 23.07. 2025 அன்று மின் இணைப்பு மீள வழங்கப்பட்டுள்ளது.

சபையின் விலங்கறுமனையினை சென்று பார்வையிட்ட குழுவினர் அங்கே சில புனரமைப்பு பணிகள் செய்ய வேண்டியுள்ளமையைக் குறிப்பெடுத்துக் கொண்ட போதிலும் அவை அம்மனையின் தொடர் செயற்பாடுகளை பாதிப்பதாக கருதவில்லை.

தங்களுடைய செயற்பாடுகளை இடைநிறுத்தும்படி சபை எழுத்து மூலமான கட்டளைகள் எதனையும் வழங்கவில்லை என குறிப்பிடுவதுடன் தங்களது செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்ளுவதில் தடை ஏதும் இல்லை என்பதையும் அறியத்தருகிறேன்.

குறித்த விலங்கறுமனையின் சுகாதாரம் தொடர்பில் சபை தொடர்ந்தும் கரிசனையுடன் சேவைகளை வழங்கும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன். - எனக் கடிதம் மூலம் தெரிவித்ததைத் தொடர்ந்து விலங்கறுமனை திறக்கப்பட்டதுடன் இறைச்சிக் கடைகளும் திறக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாநகர சபை செயலாளர் பாலகிருபனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது -

தானும் பொது சுகாதார பரிசோதகரும் விலங்கறுமனைக்கு நேரடியாக சென்று பார்வையிட்டனர் எனவும், ஆணையாளரும் அந்த இடத்த ஒன்லைன் மூலமாக பார்வையிட்டமையின் அடிப்படையில் அந்த இடத்தில் சுகாதார சீர்கேடுகள் எதுவும் இல்லை எனவும், சில திருத்த பணிகள் மேற்கொள்ள வேண்டி இருப்பதோடு, அப்பணிகள் குறித்த இடத்தில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தடையாக இல்லை எனவும் கண்டறிந்ததன் அடிப்படையில் மீளவும் செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு ஒப்பந்ததாரர்களுடன் கலந்துரையாடி குறித்த கடிதத்தை வழங்கி இருந்ததார் - எனத் தெரிவித்தார்.

# நாகூர் கனியின் ஜனாஸா துபாயில் நல்லடக்கம்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

துபாயில் காலமான சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர் கனியின் ஜனாஸா துபாய் அல்கைமா அல்யுலாப் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டதாக அவரது மைத்துனர் அன்ஸார் இப்றாஹிம் தெரிவித்தார்.

தனது மனைவி சகிதம் துபாயில் தனது மகளைப் பார்ப்பதற்கு சென்றிருந்த போது நோயுற்று எஸ்.ஐ. நாகூர் கனி அங்கு காலமானார்.



அவரது ஜனாஸாவை துபாயில் நல்லடக்கம் செய்வதற்கு குடும்பத்தவர் தீர்மானித்ததையடுத்து 28ஆம் திகதி துபாய் அல்கைமா அல்யுலாப் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அதேநேரம் கடந்த 29 ஆம் திகதி செவ்வாயன்று இஷாத் தொழுகையின் பின் வாழைத்தோட்டம் மஸ்ஜிதுல் நஜ்மியா பள்ளிவாசலில் மர்ஹூம் நாகூர் ஹனிக்கான மறைவான ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டது.

பெருந்தொகையானவர்கள் இத்தொழுகையில் கலந்து கொண்டு, அவரது மறுமை வாழ்வுக்காகப் பிரார்த்தித்துள்ளனர்.

# கிண்ணியாவில் நடைபாதைப் போக்குவரத்துக்கு தடையான வியாபார, விளம்பரப் பொருள்கள் அகற்றல்

(ஏ.எச்.ஹஸ்பர்)

ஷவீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பிரதான வீதியை ஆக்கிரமித்து பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக நடை பெறுகின்ற வியாபாரங்கள், விளம்பரங்கள் அனைத்தையும் அகற்றுகின்ற பணிகள் கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம்.மஹ்தி தலைமையின் கீழ் நேற்று மாலை இடம் பெற்றது.

கிண்ணியா வர்த்தக சங்கம். வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியோரின் ஒத்துழைப்புடன் இந்தத் திடீர் நடவடிக்கை கிண்ணியா புஹாரியடி சந்தியில் இருந்து டீ சந்தி வரை இடம் பெற்றது.

இதன் போது வீதியோரங்களில் நடை பாதைக்கு தடையாகவுள்ள வியாபார பொருள்கள் அகற்றப்பட்டன. வியாபாரிகளுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. எதிர் காலத்தில் நடைபாதையை தடை செய்து விற்பனை செய்யும் பட்சத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை இடம் பெறும் எனவும் வியாபார உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த கிண்ணியா நகர சபைத் தவிசாளர் எம்.எம்.மஹ்தி –

கிண்ணியா பிரதான வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறாக வியாபாரப் பொருள்கள், விளம்பரப் பொருள்கள் காட்சிபடுதப்படுகின்றன. இதனால் பல்வேறு விபத்துக்கள் ஏற்படுகின்றன. வாகனத் தரிப்புச் செய்ய முடியாத நிலை உள்ளதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. அதன் காரணமாக வர்த்தக உரிமையாளர்களை அழைத்து பேசினோம். இதில் சம்மந்தப்பட்ட தரப்புக்களுடன் பேசி அகற்றும் பணியினை முன்னெடுத்துள்ளோம். இதன் பிறகும் வடிகானில் மேல் வியாபாரம் செய்தால் வியாபார அனுமதி இரத்து செய்யப்பட்டு நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். – எனவும் தெரிவித்தார்.

இது குறித்து வியாபாரி ஒருவர் தெரிவிக்கையில் –

நகர சபை ஊடான இவ்வாறான நடவடிக்கை வரவேற்கத்தக்கது. வடிகானின் மீது மேசைகளை வைத்து வியாபாரம் செய்வதை உணர்ந்து தவிர்த்து நடக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.
















# இன்றைய ராசி பலன்கள் - 31.07.2025




இன்று மிகவும் அனுகூலமான நாள் இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்கலாம். முக்கியமான முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

சிறப்பாகப் பணியாற்றுவதற்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். சிறந்த பலனைக் காண்பீர்கள். உங்கள் மேலதிகாரியிடம் நற்பெயர் சம்பாதிப்பீர்கள்.

இன்றைய தினத்தை மகிழ்ச்சிகரமானதாக ஆக்குவீர்கள். உங்கள் துணையுடன் புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் கிடைக்கும். உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். நீங்கள் ஸ்திரமாகவும் அதிக திடத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்று லாபகரமான நாளாக இருக்கும். புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் இருப்பீர்கள். புதிய முயற்சிகள் இன்று லாபத்தை அளிக்கும்.

இன்று வேலைவாய்ப்புகள் மிகவும் நன்றாக இருக்கும் மற்றும் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் தொழில் முறையுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை கையாள்வீர்கள். இதன் மூலம் உங்கள் துணை உறவின் மதிப்பை உணர்ந்து கொள்வார்.

உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் போதுமான பணம் காணப்படும்.அதிக சேமிப்பும் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய நாள் சிறந்த நாளாக அமையாது. சில அசௌகரியங்களை உணர்வீர்கள். உங்கள் கவலை மற்றும் பாதுகாப்பற்ற உணர்வை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் தேவையில்லை. நேர்மறையாக எண்ணுவதன் மூலம் நீங்கள் சாதிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை மிகவும் தைரியத்துடனும் நேர்மறை எண்ணங்களுடனும் ஆற்றுவீர்கள். அதனால் பணியில் ஏற்படும் தடைகளைத் தாண்டி வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையை சமாதானப்படுத்துவதை கடினமாக உணர்வீர்கள். எனவே அவரை சந்திப்பதை தவிர்ப்பது நல்லது.

பணவரவுக்கான வாய்ப்பு இல்லை. இன்று செலவினங்கள் அதிகமாக இருக்கும்.




இன்று தடைகளும் தாமதங்களும் காணப்படும். முக்கியமான முடிகளை தள்ளிப்போடுவது நல்லது. ஓய்வு நேரத்தில் இசையைக் கேட்டு இன்புறுங்கள்.

இன்று பணியிடச் சூழல் சாதகமாக இல்லை.உங்கள் சக பணியாளர்களுடன் ஒத்துப் போவதன் மூலம் உங்கள் பணிகள் சுமுகமாக நடக்கும்.

காதலில் சுமுகமான உறவு இருக்காது. உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும் வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றது.

இன்று வீட்டை புதுப்பிப்பதற்கு பணம் செலவாகும். எனவே கட்டுக்கடங்காத செலவினங்கள் காணப்படும்.

கால்வலி மற்றும் முதுகு வலி காணப்படலாம்.ஓய்வும் அமைதியும் தேவை.




இன்றைய நாள் சாதகமாக இல்லை. இன்று படபடப்புடன் காணப்படுவீர்கள். நீங்கள் எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு அனுசரித்து நடந்து கொண்டால் அனைத்தும் நன்றாக இருக்கும். முக்கியமான முடிவுகள் அல்லது புதிய முயற்சிகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணியிடத்தில் சூழ்நிலை சாதகமாக இருக்காது. உங்கள் சகபணியாளர்களுடன் மோதல்கள் ஏற்படலாம்.

உங்கள் வீட்டின் புனரமைப்பு அல்லது வளர்ச்சி குறித்து உங்கள் தாயிடம் விவாதிப்பீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

பணவளர்ச்சி சிறப்பாக காணப்படாது. தேவையற்ற செலவினங்களை சந்திக்க நேரிடும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலைவலி அல்லது உயர் அழுத்தம் காணப்படலாம்.




இன்றைய நாள் சீராக இருக்கும். இன்று அமைதியான மனநிலை காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கியமான முடிவுளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

இன்று பணியில் சுமுகமான நற்பலன்கள் கிடைக்கும். மேலதிகாரிகள் உங்கள் திறமைகளைப் பாராட்டுவார்கள்.

இது காதலுக்கு உகந்த நாள்.உங்கள் காதல் உணர்வுகளை வெளிப்படையாக காண்பிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி அனுகூலமாக இருக்கும்.நீங்கள் புத்திசாலித்தனமாக பணத்தை கையாளுவீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்ல தேகநிலை காணப்படும்.




இன்றைய நாள் சீராக உள்ளது. திருப்தி கிடைப்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள். உங்கள் வேலைக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

ஒரு நல்ல முடிவுக்கு வருவதன் மூலம் உங்கள் வாழ்க்கையின் போக்கை நீங்கள் தீர்மானிக்க முடியும். உங்கள் பிரியமானவரை சந்திப்பதன் மூலம்இது சாத்தியம்.

பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் முகத்தில் உற்சாகம் நிறைந்து காணப்படும்.

நல்ல ஆற்றலும் மனஅமைதியும் காணப்படும். அதனால் ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.




இன்று மிகவும் நல்ல நாள். புதிய நண்பர்கள் மற்றும் அவர்களது ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். அது உங்களுக்கு பயனுள்ள முன்னேற்றத்தை அளிக்கும். வசதிகளும் மகிழ்ச்சியும் கிடைக்கும். தியானம் மேற்கொள்வது மிகவும் சிறந்தது.

இன்று ஓய்வின்றி உழைப்பீர்கள். சவாலான சில பணிகள் உங்கள் திறமைகளை சோதிக்கும். உங்கள் பணியில் நீங்கள் நன்கு வளர்வீர்கள்.

உங்கள் துணையுடனான உறவு சிறந்த முறையில் இருக்கும்.இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவும் செலவும் சேர்ந்து காணப்படும். பணத்தை கவனமுடன் கையாள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.07.2025




இன்றைய நாள் சாதகமாக இல்லை. இன்று நீங்கள் மிகவும் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். அதனை தவிர்க்க வேண்டும். இயல்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது உங்களுக்கு மிகவும் நல்லது.

சகபணியாளர்களுடன் சில மோதல்கள் காணப்படும். நீங்கள் மேற்கொண்டிருக்கும் உங்கள் பணி சம்பந்தமாக சில பதட்டங்கள் உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையை சந்திப்பதை தவிர்த்தல் நலம். சூடான விவாதங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

பணவளர்ச்சி சிறப்பாக இருக்காது. பணஇழப்புக்கான வாய்ப்புகள் உள்ளன.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். இரவில் குறைந்த தூக்கம் காணப்படும். அதனால் ஓய்வின்மை காணப்படும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைப்பது அரிது. இன்று சௌகரியங்களை இழக்க நேரலாம். அது உங்களுக்கு கவலையைத் தரும். இன்று சராசரியையும் விட சற்று மேலான நாள்.

பணியில் திறம்பட செயலாற்ற ஒழுங்கான நடைமுறையைப் பின்பற்ற வேண்டியது அவசியம். அது நீங்கள் வெற்றி பெறுவதற்கான வழிகாட்டியாக அமையும்.

இன்றைய நாள் நல்லுறவிற்கு சாதகமாக காணப்படாது. அலுவலகப் பணிச்சுமை மற்றும் உடல் நலக்கோளாறு காரணமாக உறவில் பாதிப்பு ஏற்படும்.

இன்று பணம் அதிக அளவில் செலவாகும்.எனவே திட்டமிட்டு பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்ய வேண்டும்.




இன்றைய நாள் சாதகமாக இல்லை. ஆன்மீக பயணங்கள் மூலம் இன்றைய நாளை நீங்கள் சாதகமான நாளாக மாற்றிக் கொள்ளலாம். அதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். பணியிடத்தில் நீங்கள் அதிக பொறுப்புகளை சுமக்க வேண்டியிருக்கும்.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் காட்டுவீர்கள். அதனால் எந்தப் பயனும் இல்லை. அதனை தவிர்த்தல் நலம்.

இன்று பண இழப்புகள் ஏற்படும். பணத்தைக் கையாள்வதில் விழிப்புணர்வு அவசியம்.

மனதில் காணப்படும் பதட்டம் காரணமாக கால்களில் வலி காணபப்டும்.




இன்றைய நாள் உங்களுக்கு துடிப்புடன் இருக்காது. ஆன்மிக காரியங்கள் மற்றும் பிரார்த்தனை உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்தால் துடிப்புடன் உணரலாம். பொறுமை மற்றும் உறுதியான அணுகுமுறை தேவை.

பணியைப் பொறுத்தவரை சாதகமாக இல்லை. அதிகரிக்கும் பணிச்சுமை கவலையை அளிக்கும். உங்கள் சகபணியாளர்களிடம் நல்லுறவு பராமரிக்க இயலாது.

உங்கள் துணையை சந்திப்பதை தவிர்த்தல் நலம். உங்களிடம் காணப்படும் கருத்து வேறுபாடு காரணமாக இருவருக்கிடையே மோதல்கள் ஏற்படும்.

இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும்.அதிகமான எதிர்பார்ப்புகள் கூடாது.

# வவுனியா – கூமாங்குளம் வன்முறைச் சம்பவத்தில் கைதான ஏழு பேரினதும் விளக்கமறியல் நீடிப்பு!



**(கி.வசந்தன்)**

வவுனியா – கூமாங்குளத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களின விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, கூமாங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் வீதியில் விழுந்து மரணமடைந்திருந்தார். இதன் போது அப்பகுதியில் பயணித்த போக்குவரத்து பொலிஸாரே இந்த மரணத்திற்கு காரணம் என தெரிவித்த ஒரு குழுவினர் குழப்பத்தில் ஈடுபட்டமையுடன், பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொண்டனர்.

மரணம் தொடர்பில் விசாரணை செய்யச் சென்ற பொலிஸார் மீது அப்பகுதியில் குழுமி இருந்தவர்கள் தாக்குதல் நடத்தினர். அதில் 5 பொலிஸார் காயமடைந்தனர். பொலிஸாரின் இரு மோட்டர் சைக்கிள்கா மற்றும் கப் ரக வாகனம் ஒன்று என்பன சேதமாக்கப்பட்டன.

இச் சம்பவத்தில் அரச சொத்துக்களை சேதப்படுத்தியமை, மக்களை ஒன்று கூட்டியமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறை ஏற்படுத்தியமை, இறப்புக்கு காரணமாக இருந்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் இருவர் கடந்த 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

அதனை தொடர்ந்து பொலிஸர் முன்னெடுத்த விசாரணைகளையடுத்து மேலும் 5 பேர் கடந்த 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களது வழக்கு மீண்டும் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறிதத 7 பேரையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.